மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிவகாசி
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 12 ம் நாள் வியாழக்கிழமை
இடைநிலை மனு எண். 04/2025
இன்
அசல் வழக்கு எண்.98/2023
-------

1. க. ஜெயராஜ்
த/பெ. (லேட்.) கனகராஜ் என்ற கணபதிராஜ்,
கதவு எண்.3/170, வடக்கு தெரு,
மயூர்நாதபுரம், என். மேட்டுப்பட்டி,
நென்மேனி போஸ்ட், சாத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம்.
2. க. சீனிவாசன்,
த/பெ. (லேட்.) கனகராஜ் என்ற கணபதிராஜ்,
கதவு எண்.3/126, வடக்கு தெரு,
மயூர்நாதபுரம், என். மேட்டுப்பட்டி,
நென்மேனி போஸ்ட், சாத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம். .. மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. மா. உலகநாததேவா,
த/பெ. மாதவத்தேவர்,
தெற்கு தெரு, மயூர்நாதபுரம்,
என். மேட்டுப்பட்டி, நென்மேனி போஸ்ட்,
சாத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம்.
2. சண்முகராஜ்,
த/பெ. உலகநாததேவர்,
தெற்கு தெரு, மயூர்நாதபுரம்,
என். மேட்டுப்பட்டி, நென்மேனி போஸ்ட்,
சாத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம். .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது இறுதியாக என் முன்பாக 07.03.2026 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்

திரு. S. கௌஸ்கான், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. இராஜேஸ், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு, எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனுவானது அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால் தாவா சொத்தான சாத்தூர் வட்டம், என்.மேட்டுப்பட்டிகிராமம், சர்வே எண்.544 ஹெக்டேர் 0.86.0 க்கு ஏக்கர் 2 செண்டு 13 உள்ள புஞ்சை நிலத்திற்குரிய முந்தைய மற்றும் தற்போதைய வருவாய் ஆவணங்களுடன் சாத்தூர் தாலுகா வட்டாட்சியர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சியமளிப்பதற்கு உத்தரவிட வேண்டி கட்டளை 16 விதி 2 மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்**–

**2.1.** மனுவில் 1ம் மனுதாரர். அசல் வழக்கில் 1ம் வாதி. 2ம் மனுதாரருக்காகவும் சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் வழக்கிடை சொத்தை பொறுத்து பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கு வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தாவா சொத்தை பொறுத்து மனுதாரர்கள்/வாதிகள் தங்கள் பெயரில் பட்டா பெற்று அரசுக்கு வரி வகையறாக்கள் செலுத்தி விவசாயம் செய்து அனுபவித்து வருகின்றனர். எதிர்மனுதாரர்கள்/பிரதவாதிகள் தாவா சொத்தை பொறுத்து அவர்கள் பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளதாகவும், மேற்படி சொத்து பிரதிவாதிகளுடைய முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டதென்று முன்னுக்கு பின் முரணாக கூறிக்கொண்டு உண்மைக்கு புறம்பான முறையில் எதிர்வழக்குரை

தாக்கல் செய்துள்ளார்கள்.

2.2. தாவா சொத்தை பொறுத்து அதற்குரிய வருவாய் ஆவணங்களை கொண்டு சாத்தூர் தாலுகா வட்டாட்சியர் அவர்களை விசாரித்தால்தான் அசல் வழக்கின் உண்மைநிலை பற்றி வாதிகளாகிய தங்களது தரப்பில் இந்நீதிமன்றத்திற்கு ருசு செய்ய முடியும். வழக்குரையில் கண்ட சொத்தான சாத்தூர் வட்டம், என்.மேட்டுப்பட்டி கிராமம், சர்வே எண்.544 ஹெக்டேர் 0.86.0 க்கு ஏக்கர் 2 செண்டு 13 உள்ள புஞ்சை நிலத்திற்குரிய வருவாய் ஆவணங்களுடன் சாத்தூர் தாலுகா வட்டாட்சியர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சியமளிக்க வேண்டியது மிகுந்த அவசியமாயும், முக்கியமாயுமுள்ளது. இல்லாவிடில் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டநஷ்டம் ஏற்பட்டு விடும். இம்மனுவை அனுமதிப்பதில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எந்தவொரு நியாயமான ஆட்சேபணையும் இருக்கபோவதில்லை. எனவே மனு தாக்கல்.

3. **<u>1ம் எதிர்மனுதாரர்கள்/1ம் பிரதிவாதி தரப்பு எதிருரையின் சுருக்கம் –</u>**

**3.1.** இதனடியில் வியக்கத்தக்கமாய் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகள் தவிர மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பான காரணத்தால் மறுக்கப்படுகிறது. மனுதாரர்/வாதிகளுக்கு தாவா அசல் வழக்கில் எவ்வித நியாயமான கட்சிகளும் இல்லை. அதன் காரணமாகவே தாவா வழக்கில் வாதிகள் தரப்பு இதர சாட்சி விசாரணையின்போது அவர்கள் தரப்பில் எவ்வித ஆவணங்களும் இல்லாத காரணத்தால் தாவா வழக்கின் நடவடிக்கையை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற தீய நோக்கிலும் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளை அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்ற தீய நோக்கிலும் உண்மைக்குப் புறம்பான சங்கதிகளை கொண்டு தாவா அசல் மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3.2. தாவா வழக்கிடை சொத்தின் அனுபவம், உரிமையும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பக்கம் இருக்கும்பட்சத்தில் மனுதாரர்கள்/வாதிகள்

அவற்றை மறுக்கும்பட்சத்தில் ஆவண சாட்சியங்கள் எதையும் தாக்கல் செய்ய எத்தணிக்காமல் உண்மைக்குப் புறம்பான சங்கதிகளை கொண்டு சாத்தூர் வட்டாட்சியரை இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க கோருவது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் என். மேட்டுப்பட்டி கிராமம் சர்வே எண்.544 சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை ஆவணங்களை மட்டும் தாக்கல் செய்தால் அவை தங்களுக்கு பாதகமாக இருக்கும் என்ற எண்ணத்தில் அவ்வாறு வருவாய்துறை ஆவணங்களை தாக்கல் செய்ய வட்டாட்சியரை விசாரிக்க கோருவது ஏற்கத்தக்கதல்ல.

3.3. மனுதாரர்கள்/வாதிகள் மேற்படி வருவாய்துறை ஆவணங்களை கோரி வட்டாட்சியரிடம் எவ்வித மனுவும் தாக்கல் செய்யாத நிலையில் அவைகளை நீதிமன்றத்திற்கு கொண்டு வரவைத்து அது சம்பந்தமாக சாட்சியளிக்க உத்தரவு கோருவது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள்/வாதிகள் சாட்சிகளை சேகரிப்பதற்காக சாட்சிகளை விசாரிப்பது என்பது ஏற்புடையதல்ல. சாட்சிகளை சேகரிப்பதற்கு என்று கோரி மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள்/வாதிகள் மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்திற்கு கொண்டு வருவதற்கு என்று அனுமதி கோரி மனு செய்யாமல் வட்டாட்சியரை மட்டும் சாட்சியாக விசாரிக்க கோரி மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. தாவா மனுவை தாக்கல் செய்ய இம்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்வித முகாந்திரமும் கிடையாது. எனவே மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

**4.** மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத் தக்கதா?

**5.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **தீர்வு**

**6.1.** மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் வாதிகள். தாவா சொத்தான சாத்தூர் வட்டம், என்.மேட்டுப்பட்டிகிராமம், சர்வே எண்.544 ஹெக்டேர் 0.86.0 க்கு ஏக்கர் 2 செண்டு 13 உள்ள புஞ்சை நிலத்திற்குரிய முந்தைய மற்றும் தற்போதைய வருவாய் ஆவணங்களுடன் சாத்தூர் தாலுகா வட்டாட்சியர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக உத்தரவிட வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால், தாவா சொத்தை பொறுத்து அதற்குரிய வருவாய் ஆவணங்களை கொண்டு சாத்தூர் தாலுகா வட்டாட்சியர் அவர்களை விசாரித்தால்தான் அசல் வழக்கின் உண்மைநிலை பற்றி வாதிகளாகிய தங்களது தரப்பில் இந்நீதிமன்றத்திற்கு தெரிவிக்க முடியும் என்பதால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** எதிர்மனுதாரர்கள் தங்களுடைய எதிருரரையில், தாவா வழக்கின் நடவடிக்கையை காலதாமதப்படுத்த வேண்டுமென்ற தீய நோக்கிலும் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளை அலைக்கழிப்பு செய்ய வேண்டுமென்ற தீய நோக்கிலும் உண்மைக்குப் புறம்பான சங்கதிகளை கொண்டும், தாவா மனுவை தாக்கல் செய்ய இம்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்வித முகாந்திரமும் கிடையாது என்பதால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

6.3. வழக்கு குறித்த ஆவணங்கள் பரிசீலித்துப் பார்க்கப்பட்டது. இவ்வழக்கானது நிரந்தர உறுத்துக் கட்டளை பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. வழக்கு சொத்தின் அனுபவம் குறித்து ஆராய்வதற்கு உரிய ஆவணங்கள் மிக இன்றியமையாதது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இத்தகைய சூழலில் பட்டாவானது மனுதாரர் பெயரில் இருந்து விவசாயம் செய்து வருவதாக மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. மேலும் வழக்கு சொத்து பொறுத்து பிரதிவாதிகள் தரப்பிலும் வருவாய் ஆவணங்கள் உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதனால் வழக்குரையில் கண்ட சொத்தானது யாரின் அனுபவத்தில் உள்ளது என்பதை விசாரிப்பதற்கு அதற்குரிய வருவாய் ஆவணங்களை கொண்டு சாத்தூர் தாலுகா வட்டாட்சியர் அவர்களை விசாரித்தால் தான் அசல் வழக்கின் உண்மை நிலை பற்றி தெரியவரும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட காரணத்தினால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. எனவே தாவா சொத்தைப் பொறுத்து அதற்குரிய வருவாய் ஆவணங்களை கொண்டு சாத்தூர் தாலுகா வட்டாட்சியர் அவர்கள் நேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**7. இறுதி முடிவு**

இறுதியாக இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**சாட்சி, சான்றாவணங்கள்**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் –** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** –இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்டஉரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்
இ.ம.எண்.04/2025
இன்
அ.வ.எண்.98/2023
**உத்தரவு**
நாள்–12.03.2026.